**தலைப்பு 204 - இந்து சமய மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 204 – இந்து சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 10 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2. கணக்குகள்

---

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 237.14 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் வரையில் இதில் ரூபா 226.80 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட தேறிய மொத்த நிதி ஏற்பாடுகளில் ரூபா 10.34 மில்லியன் அல்லது 4.36 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறு.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 139.35 | 131.70 | 7.65 | 5.49 |
| மூலதனம் | 97.79 | 95.10 | 2.69 | 2.75 |
| **மொத்தம்** | **237.14** | **226.80** | **10.34** | **4.36** |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 20401 ஆம் விடய இலக்கத்தின் கீழான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் பின்வருமாறாகும்.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 4.50 | 4.50 | 2.50 | 3.26 | 18.00 | 9.72 |

**2.3 பொது வைப்புக் கணக்குகள்**

திணைக்களத்தின் கீழ் வரும் 2 வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 12,200 ஆக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன். |
| 6000/0000/00/0002/0169/000 | 5,000 |
| 6000/0000/00/0013/0124/000 | 7,200 |
| | 12,200 |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

இந்து சமய மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன மேற்படி 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

05 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையினால் அந்த நிதிஏற்பாட்டை பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 19 சதவீதம் முதல் 49 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

20401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 86,931 ஆக இருந்ததுடன் 17 வருடங்கள் முதல் 27 வருடங்கள் வரையான காலவீச்சினைக் கடந்திருந்த போதிலும், அந்த நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

### 3.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.3.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவை அமுல்படுத்தல்

2009 யூன் 06 ஆந் திகதிய டீ.எம்.ஏ 2009(i) ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு சுற்றறிக்கையின் பிரகாரம், வருடாந்தம் ஆகக் குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் 4 தடவைகள் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது திணைக்களத்தால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

#### 3.3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், திணைக்களத்தால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை நாடாளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வறிக்கை 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

திணைக்களத்திற்குச் சொந்தமாக 4 வாகனங்கள் காணப்பட்ட போதிலும், சாரதிகள் இருவர் மாத்திரம் இருந்தமையால் வாகனங்களை முழுநேரமும் ஓட்டத்தில் ஈடுபடுத்துதல் கஷ்டமாக இருந்தது.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அவ்வறிக்கை 2017 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்திற்குச் சொந்தமான நூலகப் புத்தகங்கள் தொடர்பான மெய்மையாய்வு நடவடிக்கைகள் 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும், மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.5 செயலாற்றல்

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினதும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.5.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடையாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| பணிகள் | செயலாற்றல் குறிகாட்டி (KPI) | அடையப்பட்ட இலக்கு |
|---|---|---|
| இந்து சமய நூற்களை அச்சிடலும் பகிர்ந்தளித்தலும் | 25,000 பாடவிதான புத்தகங்கள் அச்சிடப்பட்டு பகிர்ந்தளித்தல் | 12,872 பாடவிதானப் புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளது. |
| இந்து இளைஞர் சமூகத்திற்கான முகாமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் | 200 இளைஞர்களுக்கு பயிற்சியளித்தல் | 119 இளைஞர்களுக்கு மாத்திரம் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. |
| இந்து கலாசாரம் தொடர்பான வகுப்பினை நடாத்துதல் | 100 மாணவர்களுக்கு வகுப்பினை நடாத்துதல் | 16 மாணவர்கள் மாத்திரம் பங்குபற்றியிருந்தனர். |

## 3.6 நட்டமும் இழப்பும்

2008 ஆம் ஆண்டில் மேற்கொண்ட பொருள் மெய்மையாய்வின் மூலம் இனங்காணப்பட்டிருந்த பெறுமதி தீர்மானிக்க முடியாத காணாமல் போன 350 நூலகப் புத்தகங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 101 மற்றும் 102 இன் பிரகாரம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.7 முகாமைத்துவ நலிவுகள்

### 3.7.1 இந்து கோயில்களுக்காக நிதியுதவி வழங்குதல்

கோயில்களுக்காக நிதியுதவி வழங்குதல் திணைக்களத்தின் பிரதான பணியாக இருந்த போதிலும், நிதியுதவி வழங்க வேண்டிய கோயில்களை இனங்காண்பதற்கான வேலைத்திட்டமொன்று பின்பற்றப்படாதிருந்ததுடன் கோயில்களிலிருந்து கிடைக்கின்ற கோரிக்கையினை அடிப்படையாகக் கொண்டு நிதியுதவி வழங்கப்பட்டிருந்தது.

## 3.8 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | பற்றாக்குறையான பதவியணியினர் |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 06 | 05 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | - | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 154 | 128 | 26 |
| (iv) | ஆரம்ப நிலை | 23 | 16 | 07 |
| | **மொத்தம்** | **184** | **149** | **35** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

சிரேஷ்ட, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலைகளில் காணப்படுகின்ற 09 வெற்றிடங்கள் அண்மைய 03 ஆண்டுகளின் போது மாற்றமின்றிக் காணப்பட்டதுடன் அந்த வெற்றிடங்களின் பிரகாரம் ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கோ அல்லது அவ்வாறான ஆட்சேர்ப்புத் தேவையற்றதாயின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியனர் எண்ணிக்கையைத் திருத்துவதற்கேனும் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.